**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 139/2020**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
| NAME | சத்தியமூர்த்தி | TALUK | பேர்ணாம்பட்டு |
| HUSBAND NAME | ரங்கநாதன் | RELIGION | இந்து |
| AGE | 59 | OCCUPATION | |
| VILLAGE | பேர்ணாம்பட்டு | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 25.08.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கை ஆனந்தன் மற்றும் ரேவதியம்மாள் இருவர் மீதும் போட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் ஆனந்தனிடம் இருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கும்போது அளந்து பார்த்து தான் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும், கிழக்கு பக்கம் தெரு, மேற்கு பக்கம் 3 அடி சந்து, வடக்கு மற்றும் தெற்கு ஆனந்தனின் காலிமனை உள்ளது.

2. நீதிமன்றத்தில் அசல் கிரய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் அசல் கிரய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என காரணம் சொல்லமுடியுமா என்றால் முடியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் காம்பவுண்டுக்குள் பிரதிவாதிகள் வரக்கூடாது என கேட்டுள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும்போது பிரதிவாதி காம்பவுண்டு உள்ள இடம் அவருடையது என இடித்து நிறைவிவிட்டார் என தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. அவருடைய இடம் எவ்வளவு என்னுடைய இடத்தில் சேர்கிறது என சொன்னார் என்றால் எதுவும் சொல்லவில்லை. கட்டிடம் கட்டும்போது பேர்ணாம்பட்டு முனிசிபாலிட்டியில் அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். அனுமதி வாங்கும்போது பதிவு செய்யப்பட்ட பொறியாளர் கொடுத்த வரைபடத்தை வைத்து அனுமதி வாங்கினேன் என்றால் சரிதான். முனிசிபாலிட்டியில் நான் தாக்கல் செய்த வரைபடத்தை வைத்து தான் அனுமதி கொடுத்தார்களே தவிர நேரடியாக வந்து பார்வையிடவில்லை என்றால் சரியல்ல பார்வையிட்டார்கள்.

4. யார் வந்து பார்வையிட்டார்கள் என்றால் இன்ஜினியர் வந்தார். அனுமதி கடிதம் வாங்கும்போதும் மற்றும் பார்வையிட்டதாக சொல்லும்போதும் என்னென்ன ஆவணங்களை கொடுத்தேன் என்றால் ஈபி ரசீது, வரி ரசீது,

குடிநீர் ரசீது. எப்போது அனுமதி வாங்கினேன் என்றால் 2024ஆம் ஆண்டு வாங்கினேன். ஈபி ரசீது மற்றும் குடிநீர் வரி ரசீது கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கட்டாத கட்டிடத்திற்கு மேற்படி வரி செலுத்த முடியாது என்றால் கட்டியபிறகு தான் வாங்கினேன்.

5. அனுமதி பெற்று கட்டிடம் கட்டியபிறகு தான் ஈபி இணைப்பும், குடிநீர் இணைப்பும் பெற்றேன் என்றால் சரிதான். நான் 2001–ல் தாவா சொத்தை வாங்கிய பிறகு இதுநாள் வரை வருவாய் அலுவலகத்தில் பட்டாவுக்கு மனு செய்து உட்பிரிவு செய்துகொண்டேனா என்றால் இல்லை. பட்டாவுக்கு மனு செய்து உட்பிரிவு செய்தால் தான் FMB ஆவணத்தில் எனது சொத்துக்கான அளவு தனியாக குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான்.

6. பிரதிவாதிகள் நான் மனை வாங்கிய வரிசையிலேயே மற்றவர்களுக்கும் மனை விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்தில் வடக்கு தெற்கு 90 அடியை தாண்டி பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் அவர் இடித்தார் என்றால் சரியல்ல, நான் சரியாக கட்டியுள்ளேன். நான் வடக்கு தெற்கு எத்தனை அடிக்கு வீடு கட்டியுள்ளேன் என்றால் 87 அடிக்கு கட்டியுள்ளேன்.

7. நான் ரோட்டுபக்கம் இடம் விட்டுவிட்டு பின்பக்கத்தில் சேர்த்து கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, சரியான அளவில் கட்டியுள்ளேன். பட்டா வாங்கியிருந்தால் எவ்வளவு அளவு என சொல்லப்பட்டிருக்கும் என்றாலும் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டியதால் பட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமித்து அளந்து பார்த்தால் நான் ரோட்டிற்கு அருகில் இடம்விட்டு கட்டியுள்ளேனா அல்லது சரியாக கட்டியுள்ளேனா என தெரியவரும் என்றால் சரிதான்.

8. மேற்படிக்கு நீதிமன்ற ஆணையரை வைத்து தாவா சொத்தை அளந்து பார்க்கிறேனா என்றால் அளந்து பார்க்கிறேன். தாவாவில் வீதிக்கு தெற்கு தாவா சொத்து உள்ளதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அசல் ஆவணத்தை தாக்கல் செய்தால் அதில் தாவா சொத்திற்கு எந்த பக்கம் வீதி உள்ளது என தெரியவரும் என்றால் தாக்கல் செய்கிறேன். மேலே குறுக்கு விசாரணையில் தாவா சொத்தின் செக்குபந்தியாக சொல்லியுள்ள விவரம் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, சரியாக சொல்லியுள்ளேன்.

(வேண்டுகோளுக்கிணங்க தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.25 18:57:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.